Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU




போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி என் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி தை 27 ஆம் நாள் ஷவ்வால் பிறை 6 (9-2 65) செவ்வாய்க்கிழமை இதழ் 361

# வியட்னம் நகர் மீது

## 2-வது அமெரிக்க தாக்குதல்!

### புதிய நிலைமை பற்றி ரஷ்ய ராணுவ அதிகாரிகள் ஆலோசனை

### ரஷ்ய-அமெரிக்க தலைவர்கள் சந்திக்க சாஸ்திரி வேண்டுகோள்

சைகோன், பெப். 8

அமெரிக்க, தென்வியட்னமிய விமானங்கள் இரண்டாவது நாளாகவும் இன்று வடவியட்னம் ராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாய் சைகோனிலுள்ள அமெரிக்கத் தூதராலயம் அறிவித்தது.

வடவியட்னமிலுள்ள டொங்ஹாய் நகரை அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித்தாக்கியதாய் ரஷ்ய செய்தி ஸ்தாபனம் டாஸ் அறிவித்தது.

ஏராளமான அமெரிக்க ராக்கெட்டுகளும் ஜெட் போர் விமானங்களும் வடவியட்னமின் கரையோரப் பகுதிகளிலுள்ள தளங்களுக்கு அதிக சேதத்தை விளைவித்துள்ளன. உயிர்ச்சேத விபரம் எதுவும் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

தென்வியட்னமில் வடவியட்காங் கெரில்லாக்கள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே அமெரிக்க இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

**அமெரிக்கர் வெளியேற்றம்**

புதிய நெருக்கடிகளைத் தொடர்ந்து தென்வியட்னமிலுள்ள சகல அமெரிக்கர்களையும் வெளியேறுமாறு அமெரிக்க அதிபர் திரு ஜோன்சன் ...

(6-ம் பக்கம் பார்க்க)

## ஹிந்தி திணிப்புக்கு கூட்டாக கண்டனம்

### இந்திய தூதரகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது

கொழும்பு, திங்கள்

தமிழகத்தின் மீது ஹிந்தி திணிப்பதை வாபஸ் வாங்க வேண்டும் என்றும் ஹிந்தியை எதிர்த்து தமிழ்நாட்டில் மாணவர்கள் நடாத்திய கிளர்ச்சியின் போது நடைபெற்ற பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத்தைக் கண்டித்தும் அது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரும் சில தீர்மானங்களை இலங்கை திராவிட முன்னேற்றக்கழக கொழும்பு மாவட்ட, தமிழரசுக்கட்சி கொழும்புக்கிளை, சர்வகலாசாலை மாணவர்கள் ஆகியவற்றின் சார்பிலே மூவரடங்கிய தூதுக்குழு ஒன்று சென்று கொழும்பில் உள்ள இந்திய தூதுவராலயத்தினரிடம் சமர்பபித்துள்ளது.

## விசேஷ ஜீ.ஸி.ஈ. (சாதாரணம்)

### 5 பகுதிகளிலுள்ள நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறும்

கொழும்பு, திங்கள்

அடுத்த மாதம் 5-ம், 6-ம் திகதிகளில் ஜி ஸி ஈ. சாதாரண) விசேஷ பரீட்சை யொன்று நடைபெறவிருக்கின்றது. சூறவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இப்பரீட்சையின் சில பாடங்களுக்குத் தோற்றமுடியாத மாணவர்களுக்காகவே நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டது.

**பாடங்கள்**

சமயபாடம், உடற்றொழிலியலும் உடல்நலவியலும், பிரயோக கணிதம், தூயகணிதம் I, II, எண்கணிதம், வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களில் பரீட்சைகள் நடைபெறும்.

1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பரீட்சைகளில் பின்வரும் பரீட்சை நிலையங்களிலிருந்த பரீட்சார்த்திகளுக்கு மாத்திரமே இப்பரீட்சை நடத்தப்படுகிறது. பரீட்சார்த்திகள் தமக்களிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களிலேயே பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

**பரீட்சை நடைபெறும் நிலையங்கள்**

பரீட்சை நடைபெறும் மாவட்டங்களும் பரீட்சை நிலையங்களும் வருமாறு:

மன்னார், வவுனியா பிரிவுகள்— எருக்கலம்பிட்டி மத்தியமகாவித்தியாலயம், மன்னார் அல்-அஸ்ஹார் மகாவித்தியாலயம், மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கலூரி, வவுனியா சைவபிரகாசவித்தியாலயம், விடத்தல்தீவு மகாவித்தியாலயம்.

அனுராதபுரம் பிரிவு— கஹட்டகஸ்திகிலியா ஆரம்ப பாடசாலை, நம்பத்விலவித்தியாசாலை, கஹட்டகஸ்திகிலியா, மதவாச்சிமகாவித்தியாலயம் மண்டபம் இல. I) மதவாச்சி மகாவித்தியாலயம் (மண்டபம் இல. II).

யாழ்ப்பாணம் பிரிவு—நெடுந்தீவு மகாவித்தியாலயம், வேலணை மத்தியமகாவித்தியாலயம் (மண்டப இல II) திருக்கோணமலை பிரிவு— இராமகிருஷ்ணமிஷன் இந்துக்கல்லூரி திருகோணமலை. திருக்கோணமலை மகாவித்தியாலயம் (மண்டபம் இல I) திருகோணமலை மாகவித்தியாலம். (மண்டபம் இல II) ஸ்ரீ சண்முக வித்தியாலயம திருக்கோணமலை. மெதடிஸ்த பெண்கள் ஆங்கில பாடசாலை திருக்கோணமலை. ஆரம்ப சிங்கள கலவன் பாடசாலை (மண்டபம் இல 1) திருக்கோணமலை. ஆரம்ப சிங்கள கலவன் பாடசாலை (மண்டபம் இல II) திருக்கோணமலை. அரச் பிஜாசப ஜேமன் கத்தோலிக தமிழ் ஆண்கள் பாடசாலை, திருகோணமலை

**மாபெரும் கூட்டம்**

சாவகச்சேரித் தொகுதி தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் பாரிஸ்டர்

திரு. எம் சிவானந்தன்

அவர்களை ஆதரித்து 10-2 65 புதன்கிழமை மாலை 6 மணிக்கு மீசாலை சந்தையில் நடைபெறும்

பிரதம பேச்சாளர்கள்:

திரு. ஜி ஜி பொன்னம்பலம்

திரு எம. சிவசிதம்பரம்

திரு ரி சிவசிதம்பரம்

## பீட்டர் கெனமன் யாழ். விஜயம்

கொண்டாவில், திங்கள்

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரம் செய்யும் பொருட்டு திரு. பீட்டர் கெனமன், திருமதி விவியன் குணவர்த்தன திரு. போனட் டி சொய்ஸா ஆகியோர் அடுத்த வாரம் இங்கு வருவார்கள்.

## மவுண்ட்பேட்டன்

லண்டன், பெப்ரவரி 8

பிரிட்டிஷ் கடற்படைத் தலைவர் மவுண்ட்பேட்டன் பிரபு, தென்கிழக்காசியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு இன்று புறப்பட்டார்.

**மேற்கு வங்க**

## சட்டசபையில் குழப்பம்

கல்கத்தா, பெப். 8

மேற்கு வங்க சட்டசபையில் கவர்னர் ஸ்ரீமதி பத்மஜா நாயுடு இன்று பேசமுற்பட்டபோது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் குழப்பம் செய்து, அவரை பேசவொட்டாமல் தடை செய்தனர் இதைத் தொடர்ந்து கவர்னர் வெளியேறிவிட்டார்

## தகனம்

புதுடில்லி, பெப். 8

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பஞ்சாப பிரதமரின் பூதவுடல் இன்று ... தகனம் செய்யப்பட்டது.

## தமிழ்நாட்டு கல்லூரிகள் மீண்டும் திறக்கப்பட்டன

### அசம்பாவிதம் ஏதுவுமில்லை

சென்னை, பெப். 8

மாணவர் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து சென்ற 10 நாட்களாக மூடப்பட்டிருந்த தமிழ்நாட்டுக் கல்லூரிகள் இன்று திறக்கப்பட்டன

சென்னையில் பெரும்பாலான மாணவர்கள் வகுப்புகளுக்கு வந்தனர் என்றும், எல்லா பெண்கள் பள்ளிகளிலும் மாணவிகள் வந்தனர் எனவும் முதன் மந்திரி திரு பக்தவத்சலம் கூறினார்.

சென்னையில் இன்று விபரீத நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை என்றும், நிலைமை அமைதியாய் இருப்பதாகவும் அவர் மேலும் அறிவித்தார்.

தமிழ்நாட்டில் ஒரு சில பள்ளிகளில் மாணவர்கள் உண்ணாவிரதம் இருக்கனர்,

மதுரையில் 2 பெண்கள் லூரிகளுக்கு மட்டும் மாணவர்கள் வந்திருந்தனர். மற்ற பள்ளிகளுக்கு மாணவிகள் வரவில்லை

திருநெல்வேலியில் பெரும்பாலான கல்லூரிகளுக்கு மாணவர்கள் வருந்தனர்

கோயமுத்தூரில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள சினிமா தியேட்டர்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. பாடசாலைகளுக்கு வெளியே ஆயுதப் பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர்

ஆங்கிலம் மட்டுமே ஹிந்தி பேசாத ராஜ்யங்களின் உத்தியோக மொழியாக இருப்பதற்கு அரசியல் சாஸனத்தில் வழிசெய்யப்படவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூறியிருக்கிறார்.

## காந்தி, நேருவுக்கு பிரெஞ்சு பிரதமர் பாராட்டு

புதுடில்லி, பெப் 8

காந்தியும், நேருவும் தோன்றிய இந்தியா மீது பிரான்ஸ் பெரும் மதிப்பு கொண்டிருப்பதாக இங்கு வந்து சேர்ந்த பிரெஞ்சு பிரதமர் திரு. பொம்பிடூ கூறினர்.

"காந்திஜி இந்தியாவுக்கு ஒரு புதிய ஆன்மாவைத் தந்தார். நேருஜி தன் வாழ்நாள் முழுதும் சர்வதேச அமைதிக்கு பாடுபட்டார்" என்று பிரெஞ்சு பிரதமர் குறிப்பிட்டார்.

காந்தி நேரு இருவரின் சமாதிகளுக்கும் அவர் மலரஞ்சலி செலுத்தினார்

சாவகச்சேரித் தமிழரசுக்கட்சித் தேர்தல்

**பிரசாரக் கூட்டம்**

இடம்:- கைதடிச் சந்தி அருகாமை

முக்கிய பேச்சாளர்:

திரு. செ. இராசதுரை,

" இரா. இளஞ்செழியன்.

சரியாக 6 30 மணிக்கு ஆரம்பமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

"எல்லாக் கலைகளையும் விட வாழ்க்கை பெரிது. இதைவிடவும் ஒருபடி மேலே சொல்லுகின்றேன். பூரணத்துவத்தை எட்டும் வாழ்க்கையைக் கொண்ட மனிதன் தான் பெரிய கலைஞன். சீலம் நிறைந்த வாழ்க்கையின் கட்டுக்கோப்பும் அடிப்படையும் இல்லாத கலை என்ன கலை."

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு தை மீ 27 உ (9-2-65)


## வியட்நாம் நெருக்கடி

வியட்நாமில் சென்ற இரு தினங்களாக நடைபெற்று வரும் சம்பவங்கள் உலக சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு நிச்சயம் கவலையளிக்கும்.

தென்வியட்நாமில் அமெரிக்க ராணுவ முகாம்கள் இரண்டின்மீது வடவியட்நாம் கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் தாக்குதல் நடத்தியதில் ஏழு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்காவும் தென்வியட்நாமும் பதில் நடவடிக்கையாக வடவியட்நாம் இராணுவ இலக்குகள்மீது தாக்குதல் நடத்தியுள்ளன. சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் வடவியட்நாம் நகரகருக்கு விஜயம் செய்துள்ள சமயத்தில்தான் அமெரிக்க ராணுவமுகாம்கள் மீது கொரில்லாத் தாக்குதல் நடைபெற்றிருக்கின்றன. வடவியட்நாம் தலைநகரான ஹனோயில் திரு. கொஸிஜின் பொதுக்கூட்டமொன்றில் "வடவியட்நாமுக்கெதிரான போர் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டால் சோவியத் யூனியன் பார்த்துக் கொண்டு சும்மாயிராது" என்று எச்சரிக்கை விடுத்த சமயத்தில்தான் அமெரிக்காவும் தென்வியட்நாமும் எதிர்த்தாக்குதல் நடவடிக்கையிலீடுபட்டிருக்கின்றன.

சோவியத் பிரதமர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அமெரிக்கா நடவடிக்கையிலிறங்கியுள்ளது. விமான எதிர்ப்பு ராக்கெட்டுகள், ஏவாயுதங்கள் இணைக்கப்பட்ட போர் விமானங்களும் வியட்நாமுக்கு அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டுள்ளன. தென்வியட்நாமிலிருந்து அமெரிக்கப் பிரஜைகள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. போர் மூளாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமென அமெரிக்கா உறுதி கூறியிருப்பினும் போர் நடவடிக்கைகள் எங்குபோய் முடியுமெனச் சொல்ல முடியாது.

அந்நிய வல்லரசுகளின் தலையீட்டினால் இந்தோசீனம் எப்பொழுதும் உலக அமைதியைக் கெடுக்கக்கூடிய ஆபத்தான இடமாகவே விளங்குகிறது.

இந்தோசீனத்தில் அமைதியை ஏற்படுத்தி உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு 1954-ம் ஆண்டிலும் 1962-ம் ஆண்டிலும் ஜெனிவா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோதிலும் அதில் கைச்சாத்திட்ட நாடுகள் அதை மதித்து நடப்பதாகத் தோன்றவில்லை. ஒப்பந்தங்கள் செய்வதால் பிரச்னைகள் தீர்ந்துவிட மாட்டாது.

சோவியத் பிரதமரின் எச்சரிக்கையும் அமெரிக்காவின் பதில் நடவடிக்கையும் மீண்டும் ஒரு உலக நெருக்கடியைத் தோற்றுவிக்கலாம் என்ற பீதியை ஏற்படுத்தும். 1962-ம் ஆண்டில் கியூபா நெருக்கடி ஏற்பட்ட சமயத்தில் அப்பொழுது உயிருடனிருந்த அமெரிக்க அதிபர் கென்னடியும் அச்சமயம் பதவியிலிருந்த சோவியத் பிரதமர் குருஷ்சேவும் விவேகத்துடன் செயலாற்றி உலக அமைதியைப் பாதுகாத்தனர். வியட்நாமில் நெருக்கடி அதிகரித்துள்ள இச்சமயத்தில் சோவியத் பிரதமர் கோஸிஜினும் அமெரிக்க அதிபர் ஜோன்சனும் எடுக்கும் நடவடிக்கையில்தான் உலகசமாதானம் தங்கியுள்ளது.

பலப்பரீட்சைக்கு இது சமயமல்ல. வியட்நாம் நெருக்கடிக்கு விரைவில் தீர்வுகாண இந்தோசீனத்துக்கான 1954-ம் ஆண்டில் கைச்சாத்திட்ட ஜெனிவா ஒப்பந்த நாடுகள் உடனடியாகக்கூடி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐ. நா. ஸ்தாபனமும் இது விஷயத்தில் சுறுசுறுப்பாகச் செயலாற்றாவிடில் உலக அமைதியைப் பாதுகாக்க முடியாது போய்விடும்.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க சமயப்பிரசார சபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் சமயப் பிரசங்கங்கள் நடைபெறும்.

வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தானம் திரு. வ. கந்தசுவாமி "சிவராத்திரிவிரதமகிமை" நாயன்மார்க்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம் திரு எஸ். கே. நடராசா "சமய வழிபாடு" நல்லூர் கிழக்கு முத்தவிநாயகர் ஆலயம் இரா. சிவசுப்பிரமணியம் "சிவராத்திரி".

செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிமுதல் 7 மணிவரை நல்லூர் சிவன் தேவஸ்தானம் இரா. சிவசுப்பிரமணியம் "சிவமயம்."

## திருக்கோணமலை அசைஸ் விசாரணை

திருக்கோணமலை, திங்கள்

மார்ச் மாதம் ஆரம்பமாகவிருந்த அசைஸ் விசாரணைகள் மே மாதம்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அண்மையில் திருக்கோணமலையில் வீசிய சூறாவளி காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

## காயமடைந்த சீனர்

கொழும்பு, திங்கள்

கொம்பனித்தெருவைச் சேர்ந்த 28 வயதுள்ள பங்சிங்பங் என்ற சீனர் காயங்களுடன் கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் தாக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. இவரது இடதுகையில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

# "சுதந்திரமும் சுபிட்சமும் பெறுவதே நமது நோக்கம்"

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழரசு வேட்பாளர் பேச்சு

வல்வெட்டித்துறை, திங்.

"தமிழ்பேசும் மக்கள் சுதந்திரத்துடனும் சுபிட்சத்துடனும் வாழவேண்டும் என்பதற்காகவே தமிழரசுக்கட்சி தோன்றியது. அதற்காகவே அது உழைத்துவருகிறது" என்று கோப்பாய்த் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பிரசாரக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்

திரு. கதிரவேலுப்பிள்ளையை ஆதரிக்குமுகமாக அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. இ. வே. இராமசுவாமி தலைமைவகித்தார்.

பெருந்தொகையான மக்கள் திரண்டிருந்த இக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் தமிழ்மொழிப் போராட்டத்தில உயிர்த்தியாகம் செய்த சின்னச்சாமி, சிவலிங்கம், இரங்கராஜன், இராஜேந்திரன் ஆகியோருக்கு இரண்டு நிமிஷம் மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது:

இன்று தமிழ்பேசும் மக்கள் அரசியல், பொருளாதாரம் முதலியவற்றில் கீழ்நிலையில் இருந்துவருகிறார்கள். நம் நாட்டுப் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் தமிழரின் ஜனநாயக, மனித உரிமைகளைப் பறித்து ஆட்சிசெலுத்தி வருகிறார்கள். இந்நாட்டில் ஒற்றையாட்சி ஏற்படும் என்பதை அறிந்தபின்தான் தமிழரசுக்கட்சி உதயமாயிற்று. எமது கட்சி சுதந்திரம், சுபிட்சத்துடன் தமிழ்மக்கள் வாழவேண்டும் என்று பாடுபட்டு வருகிறது. ஐ. நா. சாஸனத்தின்படி ஒரு மக்களை எடுத்துக்கொண்டால் சுயநிர்ணய உரிமைப்படி வாழ்வு, பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம் முதலியவற்றில் தங்கள் விருப்பப்படி அமையவேண்டும். தமிழ்பேசும் மக்களாகிய தமிழர், முஸ்லீம்கள் அடிப்படை உரிமைபெற்று வாழத்தான் தமிழரசுக்கட்சி சமஷ்டிஆட்சியை கோருகிறது. சிங்கள மக்களுக்கு சிங்கள மொழி எப்படியோ அதேபோல் தமிழ்மக்களுக்கும் தமிழ்மொழியும் இருக்கவேண்டும் என்பதுதான் எமது கொள்கை. ஒரு இனம் வாழவேண்டுமானால் அவர்கள் வாழ்வதற்கு ஒரு பிரதேசம் இருக்கவேண்டும். எமது பிரதேசம் பறிபோகாமல் பாதுகாத்துவரவேண்டும். மலைநாட்டு மக்களின் வாழ்விலும் நம்கட்சி தம் கவனத்தை செலுத்திவருகிறது. சோஷலிச பொருளாதார முறையில் இலங்கைவாழ் மக்கள் யாவரும் சமமாக பொருளாதாரம் பெறவேண்டும் என்பதும் எமது கொள்கை. நீண்டாமை ஒழிப்பு சென்ற காலத்தில் இருந்த நிலைக்கும் இன்று இருக்கும் நிலைக்கும் காரணம் நம் கட்சியே என்பது வெளிப்படை. அரசியல் வாழ்வில்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்குக் கடிதம்

## மகாவலியே நிரந்தர விமோசனமளிக்கும்

சுதந்திர தினமாகிய 4-2-65ல் 'ஈழநாடு' ஆசிரிய தலையங்கம் 'மகாவலிகங்கையை இங்கே திருப்புக' என்றிருந்தது. அத்தலையங்கம் வடபகுதியின் எதிர்காலம் பிரதிநிதிகளுக்கும் பிரமுகர்களுக்கும் சிறந்த ஓர் வேண்டுகோளாக அமைந்துள்ளது. அரசியல் கட்சிகளுக்கு அப்பால் இவ்விஷயம் நோக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

வடமாகாணமும், விசேஷமாக யாழ்ப்பாணமும் இன்னும் கால் நூற்றாண்டில் வனாந்தரமாகிவிடுமோ என்ற பீதி தேசாபிமானிகளை வாட்டிக் கொண்டிருக்கும் வேளையில் தங்கள் எல்லோருடைய மனத்தையும் ஈர்த்துள்ளது.

இம்முறை காலபோக வேளாண்மையில் பலர் எதிர்பாராத கஷ்டத்தை அடைந்துவிட்டனர். விதை நெல்லுக்கே அடுத்த வருடம் பெருந்திண்டாட்டமாயிருக்கும்.

இத்தகைய நிலைபரம் வருங்காலத்தில் தொடர்ந்து நிகழாதென்று கூறமுடியாது. ஆகவே சனங்கள் இருப்பினும் நீர் அன்றேல் வேளாண்மை ..டுத்துவிடும். வடபகுதியில் உள்ள பல்வேறு குடியேற்றத் திட்டங்களிலுள்ளோர் கதிபாழாகிக் கொண்டேவரும்.

எமது எல்லாப் பிரதிநிதிகளும் இதைத் தலையாய கடனாகக் கொண்டு ஒற்றுமையாக உழைக்கவேண்டும்.

நல்லார் வரும் வழியே சிறப்படையுமாம். மகாவலி கங்கை வடக்கே வருவதாயின் வடமத்திய மாகாண விவசாயிகளே முதன் முதலாக நன்மையடைவர்.

மாதோட்டத்தில் உள்ள மாந்தை என்ற துறை முற்காலத்தில் மா + சந்தை என்பதன் சிதைவு என்று ஆராய்ச்சியாளர்கள் காட்டுகிறார்கள்.

பாக்கர்—என்ற ஓர் விற்பன்னர் வவுனிக்குளம் என்ற துணுக்காய் பிரிவில் உள்ள 'மணலுலகில்' நெல் வேளாண்மைக்கு முதல்தரமாக அமைந்தது என்று அக்காலசட்டசபைக்கு தனது அறிக்கையில் சமர்ப்பித்திருந்தார். மகாவலிகங்கையை நாணக்கயிறு பூட்டி வடக்கே திருப்பி அதை ஆக்கவேலைக்கு உபயோகிப்பதாயின் பூநகரி—துணுக்காய் பிரிவும் வடமத்தியமாகாணமும், வரட்சியின்றி வளங்கொடுக்கும்; செல்வம்கொழிக்கும்.

இலங்கை பூராவும் உணவு விஷயத்தில் சுயதேவை பூர்த்தியடைவதுடன் எஞ்சிய தானியங்களையும் நெல்லையும் இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியும். அத்தகைய நிலைபரம் ஏற்படும்போது இன்று உணவுப்பொருட்களையும் அரிசியையும் இறக்குமதி செய்வதற்காகச் செலவிடப்படும் கோடிக்கணக்கான பணம் மிஞ்சும். ஆகவே அதை இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திக்குச் செலவுசெய்யமுடியும். இலங்கையின் பொருளாதாரமும் பூரணமான ஸ்திரநிலையை அடையும். நாடும் சுவர்க்க நாடாக மாறும்.

எமது நாட்டிலும் சிறிய நாடாக விளங்கும் இஸ்ரேலிலுள்ள "ஜோர்தான்" நதியை அவ்வரசாங்கம் நாட்டு நலத்திற்காக உபயோகித்துப் பிரயோகிக்கும்போது, கடலுக்குள் பாயும் நன்னீரை எந்த அரசாங்கமும் நாட்டின் முழுநன்மைக்காக நயம்படுத்த பின்னிற்குமா? மகாவலிகங்கையின் நீர் கடலுட்பாய்வதை எவர்தான் விரும்புவர்.

ஆர். ரி. சுப்பிரமணியம்
தலைமையாசிரியர்,
நாகேஸ்வரவித்தியாசாலை,
கண்டாவளை.

# தமிழரசுக்கட்சியின் குறைந்தபட்ச கோரிக்கைகள்

## காங்கிரஸ் சென்றிருந்தால் பெற்றிருக்கும் என்கிறார் ஜி. ஜி.

யாழ்ப்பாணம், திங்கள்

"சென்ற தடவை தமிழ்க்காங்கிரஸ பெரும்பான்மையாகப பாராளுமன்றம் சென்று சமஷ்டிக்கட்சியினர் அரசாங்கத்திடம் கோரிய அதே குறைந்தபட்ச கோரிக்கைகளை, தமிழ்க்காங்கிரஸ் கேட்டிருந்தால் நிச்சயம் கிடைத்திருக்கும்".

சித்தங்கேணி சந்திக்கருகாமையில் நேற்றிரவு நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில், தமிழ்காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

புறக்டர் வி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றக் இக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம்மேலும் கூறியதாவது:

கடந்தகால நடவடிக்கையாலும், போராட்டங்களினாலுமே அரசாங்கம் குறைந்த பட்சக் கோரிக்கைகளைக் கூட கொடுக்க மறுத்து வருகிறது.

நமக்கு அருகேயுள்ள தென்னிந்தியாவில் கோடிக்கணக்கில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். ஒரு காலத்தில் இலங்கையிலுள்ள தமிழ்மக்கள் இந்தியாவிலுள்ள தமிழ் மக்களுடன் சேர்ந்துவிடுவார்களோ என சிங்கள மக்கள் அஞ்சினர்கள். அதனாலேயே சில தீவிரவாதிகள் சிங்கள மக்களிடையே தவறான பிரசாரத்தை செய்து, சிங்களத் திணிப்பை சீக்கிரமாக செய்து வருகிறார்கள் இதன் காரணமாகவே எந்த சிங்கள அரசாங்கம் பதவிக்கு வந்தபோதிலும், சமஷ்டிக்கட்சியினரின் குறைந்தபட்ச கோரிக்கைகளை அவைகள் நியாயமாக இருந்தபோதும் ... கோரிக்கைகளை வழங்கினல் அது சிங்கள மக்களுக்கு எதிர் காலத்தில் ஆபத்தாகிவிடும் என அச்சமடைகிறார்கள். அதே குறைந்த பட்சக் கோரிக்கைகளை தமிழ்க்காங்கிரஸ் கேட்டிருந்தால், நிச்சயம் தந்திருப்பர்கள். ஏனெனில் நாங்கள் இலங்கை முழுவதும் தமிழரும் சிங்களவரும் சம அந்தஸ்துடன் வாழவேண்டும் என்ற கொள்கையை ஆதரித்து வருகிறோம். இந்தக் கோரிக்கையை பல சிங்கள மக்கள் மட்டுமன்றி ஒருகாலத்தில் சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட்கட்சியும் ஆதரித்து வந்தன. இம்முறை தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்களை பெரும்பான்மையாக அனுப்பினல்சமஷ்டிக்கட்சிஅரசாங்கத்திடம் கோரிய குறைந்தபட்சக்கோரிக்கைகளிலும் பார்க்க கூடிய உரிமை பெற்றுத் தருவோம். அல்லது மூன்று வருட காலத்தில் எங்கள் பதவிகளை ராஜினமாச் செய்துவிட்டு வருவோம்.

உடுப்பிட்டி முன்னள் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:


தமிழ்பேசும் மக்கள் கட்சி பேதமின்றி போராடினல்தான் வெற்றி பெறலாமேயொழிய தனிப்பட்ட கட்சியால் நடத்தப்படும் போராட்டம் வெற்றியளிக்காது என்றார்.

வட்டுக்கோட்டை தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். கே. சுப்பிரமணியம் பேசும்போது கடந்த ... வருட காலமாக தமிழ் மொழி கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருவதோடு தமிழ் மாகாணங்களும், பொருளாதாரவளம் குன்றி வருவதாகவும் மீண்டும் தமிழ் உரிமை பெற்று தமிழ் மாகாணங்களை வளம்படுத்த வேண்டுமானல் இம்முறை தமிழ்க்காங்கிரஸ அபேட்சகர்களையே அனுப்ப வேண்டுமெனவும் கூறினர்.


திரு ஸ்ரீ பாஸ்கரன், திரு. சிவநேசன் மற்றும் பலர் பேசினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 'ஈழநாடு' ஊழியர் அளித்த கதம்ப நிகழ்ச்சிக்காட்சிகள்



தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவிகளின் 'குற்றாலக் குறவஞ்சி' நாட்டிய நாடகத்தில் உள்ளத்தை அள்ளும் ஒரு காட்சி.




தமிழ்மணி கணேசசுந்தரன் குழுவினரின் வில்லுப் பாட்டு நடைபெறுகிறது.



'கலையரசு' நாடகமன்றம் அளித்த 'மன்னிப்பு' நாடகத்தில் உணர்ச்சிகரமான ஒரு கட்டம்.



தள்ளாத வயதிலும் மேடையில் தோன்றி 'வயோதிபர் விடுதியில் விசித்திர வைபவம்' நிகழ்ச்சியை அளித்து மக்களை மகிழ்வித்த கலை அரசு சொர்ணலிங்கம்.



மாவிட்டபுரம் முத்தமிழ்க்கலை மன்றம் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை டைரக்ஷனில் அளித்த 'செங்கோல் சரிந்தது' என்ற சரித்திரநாடகத்தில் ஒரு காட்சி.



நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த டாக்டர் கே. கனகரத்தினம் தமது தலைமையுரையில் சூறாவளியின் கோரச் சம்பவங்களை மனம் உருக எடுத்துக் கூறுகிறார்.



அப்புஹாமியாக வந்து மயில் கால் எண்ணெ விற்று சிரிப்பூட்டிய ராஜ் நகைச்சுவை நாடமன்ற இயக்குனரும் தயாரிப்பாளருமான ராஜரத்தினம். (ராஜ்)



'மயில் கால் எண்ணெ' விற்ற ராஜ், சக்கடத்தாராகத் தோன்றி சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்கவைத்தார்.



கலைஞர்களுக்கும் சபையோருக்கும் நிர்வாக ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் நன்றி கூறுகிறார்.



'ஈழநாடு' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த 'கனவேள்' குழுவினரின் நவீன கதாப்பிரசங்கம்.

படப்பிடிப்பு: லீலா ஸ்ரூடியோ


இங்கு காட்சிதரும் புளக்குகளை
தயாரித்து உதவியது
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## மூளைக்கு வேலை

சென்ற வாரம் கேட்கப்பட்ட கேள்வியின் சரியான விடை ஐந்து (5) பேர் என்பதே. விடை எழுதியவர்களில் அநேகமானவர்கள் சரியாகவே எழுதியிருக்கின்றனர். அனைவருக்கும் எனது பாராட்டுதல்கள்.

சரியான விடையனுப்பியவர்களின் பெயர்கள் வருமாறு:- ஜெ. சிவக்குமார், பருத்தித்துறை; சி. இராசேஸ்வரி, மாதகல்; இ. மகேஸ்வரி, யாழ்ப்பாணம்; க. விஜயகுமார், யாழ். மத்திய கல்லூரி; பி. சண்முகராசா, அளவெட்டி வடக்கு; ச. பூலோகநாதன், கொய்யாத்தோட்டம்; சி. ஆனந்தராசா, நல்லூர்; சோ. இரத்தினராசா, சாவகச்சேரி; பீ. சத்தியசீலன், கல்லூர்; சா. புஷ்பநாதன், நயினாதீவு; துணைசராஜ், மாதகல்; இ. மகேஸ்வரி, யாழ்ப்பாணம்; கு. உருத்திராபதி, காங்கேசன்துறை; நடேஸ்வராக்கல்லூரி; ஜேன் மயில்வாகனம், சண்டிலிப்பாய் பெண்கள் கல்லூரி; ஐ. சிங்கராசா, மைலிட்டி; சி. தவலிங்கம், காங்கேசன்துறை; ச. பேரராசா, கரணவாய் தெற்கு; சோ. யோகேந்திரன், வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி; ஏ. பி. சந்திரகாந்தன், மீசாலை; இ. இராசேஸ்வரன், யாழ்ப்பாணம்; கா. பரமேஸ்வரசிங்கம், வரணி; இ. அமிர்தநாயகம், நெடுந்தீவு; ஏ. கமலாஹரன், காரைநகர் இந்துக்கல்லூரி; என். சந்திரராசா, கவாலி தெற்கு; ஏ. சதானந்தன், மானிப்பாய்; ஐ. பேரம்பலம், யாழ்ப்பாணம்; அ. கணேசமூர்த்தி, சண்டிலிப்பாய் வடக்கு; க. கனகேந்திரன், காங்கேசன்துறை; பொ. சண்முகநாதன், நல்லூர்; க. சொர்ணாம்பிகை, காரைநகர்; இ. வரித்தம்பி, கல்வயல்; க. அரிபசிவம், கற்கோவளம்; மூ. சித்தானந்தன், சரசாலை தெற்கு; மகிழந்தியாகராசா, சங்கானை கிழக்கு; சோ. கோகுலானந்தன், அளவெட்டி வடக்கு; க. ஆனந்தன், கந்தழி; பொன். சித்தியானந்தம், பொன்னாலை; செ. சச்சிதானந்தம், அளவெட்டி வடக்கு; ச. சோமலிங்கக்குமார், காரைத்தீவு; போகேஸ்வரன், சரசாலை; சி. கந்தலிங்கம், நீர்வேலி; பொ. தருமலிங்கம், வல்வெட்டித்துறை; இரா. ராஜமனோகரி, கோண்டாவில் வடக்கு; இரா. தர்மலிங்கம், நெடுந்தீவு; க. கனகலிங்கம், அதிரி; பொ. சிவபாகம், துன்னாலை தெற்கு; வி. சிவஞானசுந்தரம், பலாலி; நந்தினி, ஸ்ரீ சோமஸ்கந்தா, புத்தூர்; க. கந்தசாமி, குப்பிழான்; சி. சண்முகசுந்தரம், நெல்லியடி; ஆ. சுப்பிரமணியம், ஏழாலை வடக்கு; கே. குணம், கொக்குவில் கிழக்கு; ம. சே. கருணாத்தினம், காவெட்டி; இரா. பாஸ்கரன், கோண்டாவில் வடக்கு; செ. சண்முகநாதன், சிறுப்பிட்டி; கே. குலேந்திராசா, காவெட்டி; இரா. பிரபாகரன், கோண்டாவில் வடக்கு; க. சாந்தி, கொக்குவில் கிழக்கு; செ. ஜெனி, கொக்குவில் கிழக்கு; சி. குலேந்திரன், காங்கேசன் மேற்கு; சி. சேகர், மூளாய்; க. சீனிவாசகம், சித்தங்கேணி; க. இராசேஸ்வரி, சங்கானை கிழக்கு; மு. ஜெயசோதி, நல்லொடை; செ. செந்தில்குமார், பன்னாலை; க. ஜெயரத்தினம், இணுவில் கிழக்கு; ஐ. வசந்தநாதன், வேலணை கிழக்கு; சர்வரி, மூளாய்; க. பிரபா, பருத்தித்துறை; க. மகேந்திரன், மத்தியவீதி, திருக்கோணமலை; கா. கந்தசாமி, யோகபுரம்; சேனாதிராசா, மாங்குளம்; வி. ராசேஸ்வரன், ஸ்டேஷன்வீதி, வவுனியா; எம். எம். மணி, மறைவன்புலம், சாவகச்சேரி; பொ. ஜெயராசன், துன்னாலை தெற்கு; அ. பத்மலிங்கம், யாழ்ப்பாணம்; க. சுப்பிரமணியம், வேலணை கிழக்கு; செல்வறதி ஞானப்பிரகாசம், செ. க. சிவகுமாரன், க. தனபாலசுந்தரம், வே. நவரட்ணசிங்கம், யாழ்ப்பாணம்; செ. சண்முகநாதன், காங்கேசன்துறை; த. அருமைநாயகம், கே. விஜயரத்தினம், மீசாலை.

### கேள்வி மண்டலம்

கடந்த வாரம் உங்களுக்கு சிறிது இலேசான கேள்வி கேட்டு விட்டேன் என்பது நீங்கள் எனக்கு அனுப்பியிருந்த விடைகளிலிருந்து தெரிகிறது. ஆகையினால் இவ்வாரம் சிறிது மூளைக்கு வேலை கொடுக்கக் கூடிய கேள்வியொன்றைக் கேட்கின்றேன். சிந்தித்துப் பாருங்கள்.

நமது காலத்தில் வாழ்ந்து, மறைந்த ஐவரைப் பற்றிய கேள்விதான் இந்த வாரம் இப்பகுதியில் இடம் பெறுகிறது. உங்களுக்கு உதவியாக இந்த ஐந்து மனிதர்கள் சம்பந்தப்பட்ட சில தகவல்களைக் கொடுப்பேன். இந்த ஐந்துபேரும் யார், யார் என்பதைக் கண்டுபிடித்து நீங்கள் எழுத வேண்டும். கவனமாக படியுங்கள்.

A இவர் ஒரு அசாதார புருஷர். இவரை நினைக்கும் பொழுது பாக்கெட் சடிகாரம் ஞாபகத்துக்கு வரும்.

B. இவர் ஒரு பிரிட்டிஷ் அரசியல்வாதி. குடை, இவரது ஞாபகச் சின்னம்.

C இவர் ஒரு சமாதானத் தலைவர். ரோஜா மலர் என்றால் இவர் என்பது அர்த்தம்.

D. இவர் ஒரு புகழ்பெற்ற ஆங்கிலேயர். சுருட்டு புகைப்பதில் தன்னிகரற்றவர்.

E. இவரை இலேசில் மறந்திருக்கமாட்டீர்கள். உலகையே நடுநடுங்கச் செய்த இவரை நினைக்கும்பொழுது, கறுக்கு மீசை தான் ஞாபகத்தில் வரும்.

எங்கே பார்ப்போம் நீங்கள் நன்றாக யோசித்து இந்த ஐவரும் யார் என்பதை எனக்கு எழுதுங்கள். தயவு செய்து விடைகளை தபாலட்டையில் மட்டும் எழுதுங்கள். A-க்கு முன்னர் யார் என்பதையும் B-க்கு முன்னர் யார் என்பதையும் ... தெளிவாக எழுதினால் போதும். வேறு எதுவும் எழுதவேண்டாம். மறைந்தும் மறையாத இந்த ஐவரையும் வரிசைப்படி எழுதி, எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வையுங்கள். விலாசம். "மாணவர் மலர், 'ஈழநாடு', த. பெ. 49, யாழ்ப்பாணம்.

—சாந்தா

மீண்டும் யுத்தமேகங்கள்

# வட வியட்னும் தளங்கள் மீது அமெரிக்கா தாக்குதல்கள்

## 49 விமானங்கள் ஈடுபட்டன

### தென்வியட்னாமுக்கு புதிய படைகளை அமெரிக்கா அனுப்பியுள்ளது

வாஷிங்டன், பெப். 8

வடவியட்னாமிலுள்ள இராணுவ விநியோக தளங்கள்மீது அமெரிக்க போர் விமானங்கள் கடுமையான தாக்குதல் நடத்தியுள்ளன. தென்வியட்னாமில் அமெரிக்க இராணுவ தளங்கள்மீது வடவியட்காங் கொரில்லாக்கள் நடத்திய தாக்குதல்களுக்கு எதிராக, இந்தப் பழிவாங்கும் நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால சண்டைகளில் சென்ற வாரத்தில் அமெரிக்கர் மீது வடவியட்காங் கொரில்லாக்கள் நடத்தியதாக்குதல்கள்தான் பெரிதாகவிருந்ததென்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

வடக்கு வியட்னாமிலுள்ள தளங்களைத் தாக்குவதில் நேற்று 45 அமெரிக்க ஜெட் யுத்த விமானங்கள் ஈடுபட்டனவென்றும் இந்தத் தாக்குதல்கள் வடவியட்னாமின் தென் பகுதியில் மேற்கொள்ளப்பட்டவென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க போர் அணியொன்று தென்வியட்னாமுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும் வடக்கு வியட்னாம்மீது உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் இந்த பதில் நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள்சபை தலைவருக்கும் மாஸ்கோவுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் ஜோன்ஸன் தெரிவித்தார்.

## ஈரான் மன்னர்

ராவல்பிண்டி, பெப். 8

ஈரான் மன்னர் இன்று பாகிஸ்தான் வந்துசேர்ந்தார்.

## பொம்பிடோ

புதுடில்லி, பெப். 8

பிரெஞ்சு பிரதமர் பொம்பிடோ இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார்.

## அமெரிக்காவின் உதவி அதிகரிப்பு

வாஷிங்டன், பெப். 8

தாய்லாந்துக்கான அமெரிக்க பாதுகாப்பு உதவிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

## பாகிஸ்தானில் விஞ்ஞான மகாநாடு

ராவல்பிண்டி, பெப். 8

பாகிஸ்தானில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருக்கும் விஞ்ஞானிகள் மகாநாட்டில் அமெரிக்கா, ரஷ்யா, கம்யூனிஸ்ட் சீனா ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த ஐம்பதுக்குமதிகமான விஞ்ஞானிகள் கலந்துகொள்வர்.

## கெய்ரோன் கொலை

### மூவர் பாதுகாப்பில்

புதுடில்லி, பெப். 8

முன்னாள் பஞ்சாப் முதன் மந்திரி திரு. பிரதாப் சிங் கெய்ரோனைக் கொலைசெய்தவர்களைக் கண்டுபிடிப்பதில் இந்தியப் பொலிசார் பெருமளவில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கொலை சம்பந்தமாக மூவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4 அமெரிக்க விமானங்கள் சுடப்பட்டனவாம்

### "சுத்தப்பொய்" என்கிறது அமெரிக்கா

ஹனோய், பெப். 8

வடக்குவியட்னாம்மீது தாக்குதல் நடத்திய அமெரிக்க விமானங்களில் நான்கு விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஹனோ வானொலி அறிவித்துள்ளது.

கடற்கரை வழியாக வந்த இந்த விமானங்கள், வடக்கு வியட்னாம் கிராமங்கள் மீது குண்டுமாரி பொழிந்தன என்றும் வடக்கு வியட்னாம்கூறியுள்ளது.

#### அமெரிக்கா மறுப்பு

அமெரிக்கவிமானங்கள்சுட்டு வீழ்த்தப்பட்டசெய்தியை அமெரிக்கா மறுத்துள்ளது. இதில் சிறிதளவும் உண்மையில்லையென்றும் தாக்குதல் நடத்திய விமானங்களில் ஒன்றுதவிரமற்றவை யாவும்திரும்பிவிட்டன என்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

## நடவடிக்கை குறித்து பீகிங், மாஸ்கோ சீற்றம்

பீகிங், பெப். 8

வடக்கு வியட்னாம்மீது அமெரிக்கா நடத்திய திடீர் தாக்குதல்கள் குறித்து கம்யூனிஸ்ட சீனா உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கவில்லை. ஆனால் சீன செய்தி ஸ்தாபனம் இதுபற்றி குறிப்பிட்டுள்ளது.

"ஆத்திரமூட்டக்கூடிய பாரதூரமான நடவடிக்கைகளில் அமெரிக்கா இறங்கியுள்ளது" என்று அந்தச் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

#### மாஸ்கோ

ரஷ்யாவும் இதுபற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்காவிட்டாலும் "அமெரிக்காவின் செயல்கள் ஆத்திரமூட்டக்கூடியதாகவிருக்கின்றது" என்று மாஸ்கோவானொலி அறிவித்துள்ளது.

தற்பொழுது வடக்கு வியட்னாம் தலைநகர் ஹனோயிலிருக்கும் சோவியத்பிரதமர் கோஸிஜின், வடக்கு வியட்னாமுக்கு ரஷ்ய ஆதரவு இருக்குமென்று உறுதி கூறியுள்ளார்.

## சீன யோசனை

### பிரெஞ்சு கைவிரிப்பு

புதுடில்லி, பெப். 8

தற்போதுள்ள ஐக்கியநாடுகள் சபைக்குப் பதிலாக மற்றொரு சபையொன்றை அமைக்கலாம் என்ற கம்யூனிஸ்ட் சீனாவின் யோசனைக்கு பிரெஞ்சு பிரதமர் பொம்பிடோ ஆதரவளிக்க மறுத்துள்ளார்.

"பல ஐ. நா. சபைகளை நிறுவுவது முடியாத காரியம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அயூப்பின் சீன விஜயம்

ராவல்பிண்டி, பெப். 8

பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் அடுத்த மாதம் சீனாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அங்கு அவர் ஒரு வாரம் தங்குவார்.

## மலேஸியாவை நசுக்க சீனாவுடன் கூட்டு?

நியுயோர்க், பெப். 8

சீனாவுடன் கூட்டுச் சேர்ந்து மலேசியாவை நசுக்க இந்தோனேஷியா திட்டமிட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்ட புகாரை இந்தோனேஷியா அதிகாரியொருவர் இங்கு மறுத்துள்ளார்.

## கேரள தேர்தல்

புதுடில்லி, பெப். 8

கேரளாவின் பொதுத்தேர்தல் அடுத்த மாதம் நடைபெறும். இத்தேர்தலில் 14 கட்சிகள் போட்டியிடுகின்றன. 853 பேர் அபேட்சகர்கள்.

## எதிரிகள் விடுதலை

ஊர்காவற்றுறை, திங்கள்

காரைநகர் மேற்கு வாசியான ஏ. கே. சுப்பிரமணியம் என்பவரை அடித்துக் காயப்படுத்தியதாக அதே ஊரைச் சேர்ந்த கே. வி. தம்பையா இரத்தினசிங்கம் மனைவி கமலாதேவி, தம்பிராசா இரத்தினசிங்கம் ஆகியோர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி திரு சி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் தரப்பில் புரக்டர் பி. கதிரவேலுவின் உதவியுடன் அட்வகேட் திரு. கணேசலிங்கம் ஆஜரானார், வழக்காளி சார்பில் புரக்டர் திரு விசுவநாதனின் உதவியுடன் அட்வகேட் திரு. நடராசா ஆஜரானார்.

வழக்காளி சுப்பிரமணியம், தம்பையா ஆகியோர் சாட்சியமளித்தனர். வழக்காளியின் இன்றைய முறைப்பாடும் பொலிசாரிடம் முதல் கூறிய முறைப்பாடும் முரண்பாடாக இருப்பதை, சிரேஷ்ட வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார். நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தி. மு. க. முறையில் திருமணம் செய்தோம், பதிவுஇல்லை"

## ஜீவனாம்ச வழக்கில் பெண் சாட்சியம்

ஊர்காவற்றுறை, திங்கள்

"திருகோணமலை புல்மோட்டை கார்ப்பரேசனில் கடமையாற்று நயினாதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவலிங்கம் என்பவரே எனது கணவர். நாங்கள் இருவரும் காதலித்து விவாகம் செய்து கொண்டோம். கணவர் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையை யுடையவராய் இருந்தமையால், அவர் விருப்பத்திற்கு ஏற்ப எங்கள் திருமணம் தமிழ்த் திருமணமாக ஐயர் இன்றி நடைபெறறது. திருமணபபதிவு நடைபெற வில்லை."

நயினாதீவுவாசியான நாகம்மா என்பவர் தமது கணவர் சிவலிங்கம் மீது ஜீவனாம்சம் கோரித் தொடர்ந்த வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி. கே. இரசரத்தினம் முன்னிலையில் நடைபெற்றபோது வழக்காளி நாகம்மா சட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

எதிரிதரப்பில் புரக்டர் திரு. ஜிம்மி இராசரத்தினத்தின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. பாலசுந்தரம் ஆஜரானார். வழக்காளி சார்பில் புரக்டர் திரு. பி. கதிரவேலு உதவியுடன் அட்வக்கேட் திரு. கணேசலிங்கம் ஆஜரானார்.

சிரேஷ்ட வக்கீலான திரு பாலசுந்தரம் சாட்சியை நீண்ட நேரம் குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி மேலும் கூறியதாவது:-

1959-ம் ஆண்டு பங்குனியில் நயினாதீவில் உள்ள எனது தாய் தகப்பன் இல்லத்தில் திருமணம் நடந்தது. எனது கணவரும், நானும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள். எங்கள் திருமணத்தின் போது கும்பம் வைத்துத் தாலி கட்டப்பட்டது. "கும்பத்துடன் பிள்ளையார் பிடித்து வைக்கப்பட்டதா?" என வழக்கறிஞர் திரு. பாலசுந்தரம் கேட்ட கேள்விக்குச் சாட்சி பதிலளிக்கையில் தி. மு. க. திருமணம் ஆகையால் பிள்ளையார் பிடித்து வைக்கவில்லை எனக்கூறினார். தாய் தகப்பன் திருமணப்பதிவு செய்யும்படி கேட்டிருந்தார்கள். இனிமேல் பதிவுசெய்து கொள்ளலாம் எனக் கணவர் கூறினார். எனக்கும், எனது கணவருக்கும் விவாகத்திற்கு முன் காதல் இருந்தமை கணவரின் தமையனுக்குத் தெரியும். திருமணத்திற்கு மறுநாள் திருகோணமலைக்குப் போனோம். அங்கு வசித்தோம். ஒரு குழந்தைக்குப் பெற்றோர் ஆனோம். 1963-ம் ஆண்டு ஆனிமாதம் நயினாதீவில் கொண்டு வந்து என்னையும் பிள்ளையையும் விட்டுவிட்டுக் கணவர் திருகோணமலைக்குப் போனவர் திரும்பி வரவில்லை. பலகடிதங்கள் எழுதினேன் அவர் வரவில்லை.

திருகோணமலை, ஆஸ்பத்திரியில் பிள்ளை பிறந்ததைப் பதிவு செய்தபோது நீங்கள் இருவரும் சென்றல்லவா பதிவுசெய்தீர்கள் என வழக்கறிஞர் கேட்ட கேள்விக்கு சாட்சி "ஆம்" எனப்பதிலளித்தார். முறையான கல்யாணம் இல்லாததாலேயே நீங்கள் இருவரும் கையொப்பம் வைத்தீர்கள். என வழக்கறிஞர் குறிப்பிட்டார். வைப்பாட்டியாகவே அவர் உம்மை வைத்திருந்தார் என எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்ட கேள்விக்குச் சாட்சி தான் "வைப்பாட்டி" அல்ல என மறுத்துரைத்தார். விசாரணை இம்மாதம் 26-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்: 485

குருடட், மீனாகுமாரி

நடித்த

(ஜனாதிபதி பரிசுபெற்ற ஹிந்தி)

சாஹிபிபி ஒர் குலாம்

ராஜா சினிமா (சுழிபுரம்)

மனோகரன்

நடிக்கும்

கொஞ்சும்குமரி

REGAL — JAFFNA

NOW SHOWING

James Philbrook &
Nancy Kovack
in
THE
WILD WESTERNERS
(Eastmancolor)

5-வது வெற்றி வாரம்!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30

சனி, ஞாயிறு 4 காட்சிகள்:

காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30



சிவாஜி கணேசன் - சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பினாரா (வெள்ளவத்தை) — நவா (கொம்பனித்தெரு)

மற்றும் 6 சினிமாஸ் திரைகளில்

ஜெமினி கணேசன் - சாவித்திரி

நடித்த

கற்பகம்

# "சமஷ்டி ஆட்சியே நம் நாட்டுக்கு ஏற்றது"

## பிரசாரக்கூட்டத்தில் விளக்கம்

சுழிபுரம், திங்கள்

"இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் குடியுரிமை, தொடியுரிமை, மொழியுரிமை மற்றும் சகல உரிமைகளும் பறித்துக் கொள்வதற்கு சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு உறுதுணையாக தமிழ்க் காங்கிரஸ் தலைவர் இருந்திருக்கிறார் என்பதை தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தயாராக உள்ளேன்" என மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு அ. அமிர்தலிங்கத்தை ஆதரித்து மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கூறினார். இளைப்பாறிய சுழிபுரம் தபாலதிபர் திரு. இ. தம்பையா தலைமை வகித்தார், திரு. இராசதுரை மேலும் குறிப்பிட்டதாவது:

இரண்டு வருடத்தில் உரிமையைப் பெற்றுத் தருவதாக கூறுகின்றார்கள். தனது சடங்கு கால வாக்குறுதிகளையும், செயல்களையும் கவனிக்குமாறு அவர்களை வேண்டுகின்றேன். இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு ஒன்றுபட்ட இயக்கமாக விளங்கும் தமிழரசுக்கட்சியினரை திட்டுவதிலும் மூட்டுக்கட்டை போடுவதிலும் தான் பலர் தமது நேரத்தைச் செலவு செய்கின்றனர், பஸ் சேவை தேசியமயம் என்ற போர்வையில் நடைபெறும் சம்பவம், நெற்காணி மசோதா அமுல் என்ற செயல் எல்லாம் தமிழ்பேசும் மக்களுக்குபெரும் இன்னல்களைக் கொடுப்பதாக இருக்கின்றன. இதை நாம் கூறிவந்துள்ளோம்.

கிளிநொச்சித் தொகுதியில் தமிழரசு அபேட்சகராகப் போட்டியிடும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழ்பேசும் மக்களைப்பார்த்துக் கேட்கப்படும் கேள்வி இரண்டேயாகும் ஒன்று தமிழ் பேசும்மக்கள் இந்த நாட்டில் உரிமையுடன் வாழ்வதா? அல்லது சலுகைகளைப் பெற்று அடிமைகளாக வாழ்ந்து அழிந்து போவதா என்பதேயாகும். இதை இம்முறை பொதுத்தேர்தல் நன்கு தீர்ப்பளிக்கும் என எதிர்பார்க்கின்றேன். ஒற்றுமை, ஒத்துழைப்பு என்றெல்லாம் பேசப்படுகின்றது. இவற்றால் யாது பயன்? நாம் ஒத்துழைப்புக் கொடுத்ததால்தான் எமது உரிமைகள் பறிக்கப்பட்டன. நாம் இந்த நாட்டில் உரிமையுடன் வாழ எமக்கென்ற ஒரு பிரதேசம் வேண்டும், அப்பிரதேசத்தைப் பெற்றுக் கொள்ளப்படும் இயக்கம் இலங்கை தமிழரசுக்கட்சியேயாகும்.

தமிழ் அரசுக்கட்சி காரியதரிசி திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழ் பேசும் இனத்துக்கு சொந்தமாக ஒரு பிரதேசம் வேண்டும். அந்தப் பிரதேசத்தை வளம் உள்ளதாகச் செய்வதற்கே நாம் சமஷ்டி ஆட்சி கோருகின்றோம். ஒன்றுக்கு மேற்பட்டமக்கள் வாழும் நாட்டுக்கு சமஷ்டி ஆட்சிதான் சிறந்தது என்பதை காலஞ்சென்ற பண்டாரநாயகாவும் திரு ஜி ஜி. பொன்னம்பலமும் முன்னர் கூறியதை நாம் அறிவோம். உலக நாடுகளில் நடைமுறையில் இருப்பதையும் நாம் காண்கின்றோம். சமஷ்டி என்றால் ஏதோ புரியாத வித்தையாக விண்குழப்பம்செய்து மக்களை தப்பான பாதைக்கு இழுத்துச் செல்கின்றார்கள் சிலர். நீண்ட உறக்கத்துக்குப் பின்னர் அந்நியகாலத்தை நோக்கிக் கொண்டு இருப்பவர்கள் சிலர் எமது இயக்கத்தையும் எம்மால் நடத்தப்பட்ட இயக்கங்களையும் தூற்ற முற்பட்டது பெரும் விந்தையாக உள்ளது.

திரு. மு. கணபதிப்பிள்ளை அ. தையல்பாகர், சி. சிவபாக்கியநாதன், பெ. சிவகுமாரன், எஸ். வீரகத்தி உட்பட மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

## 7 அமெரிக்கர் பலியாகினர்

சைகோன், பெப் 7

தென்வியட்நாமில் அமெரிக்க ராணுவ முகாம்கள் மீது வியட்நாங் கொரில்லாக்கள் நடத்திய ஒரு தாக்குதல் விளைவாக 7 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டார்கள். 80 அமெரிக்கர் காயமடைந்தனர்.

## ட்ரோலி பாதைகளுக்கு இ. போ. ச. பஸ்கள்

கொழும்பு, திங்கள்

தற்போது கொழும்பில் நிறுத்தப்பட்டிருக்கும் ட்ரொலி பஸ்கள் சேவையிலிருந்த பாதைகளில் இ. போ. ச. பஸ்களை சேவையில் விடுவதென இ. போ. ச. முடிவு செய்துள்ளது.

கடந்த வருட முடிவில் 'ட்ரொலி' பஸ் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து குறிக்கப்பட்ட அளவு இ. போ. ச பஸ்கள் ட்ரொலி பஸ்கள் ஓடிய பாதையில் சேவையில்விடப்பட்டன. ட்ரொலி பஸ்தொழிலாளர் யூனியனின் ஆட்சேபத்தின் பேரில் சேவையிலீடுபட்ட இ. போ. பஸ்கள் வாபஸ் வாங்கப்பட்டன.

போக்குவரத்து மந்திரிக்கும் மேயருக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையின் முடிவில் 40 இ. போ. ச. பஸ்கள் ட்ரொலி பஸ்கள் ஓடிய பாதையில் சேவையில் ஈடுபடுத்தவும் இ. போ. ச. முடிவு செய்துள்ளது.

## மார்ச் 22-ல் பாடசாலை விடுமுறை

கொழும்பு, திங்கள்

பொதுத்தேர்தல் நடைபெறும் தினமான மார்ச்மாதம் 22-ம் திகதி பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்படும்.

நாட்டிலுள்ள பல பாடசாலைகளில் பொதுத் தேர்தல் நடைபெறும் தினமன்று வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதைத் தொடர்ந்தே அன்றைய தினமன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 23-ம் திகதி சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை அளிக்கவேண்டுமென்று கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி கலுகல்லே அறிவித்துள்ளார்.

### பாடசாலைகள் திறக்கப்பட்டன

கொழும்பு, திங்கள்

றம்ழான் கொண்டாட்டத்தின் பின்னர் இன்று சகல முஸ்லிம் பாடசாலைகளும் மீண்டும்திறக்கப்பட்டன.

## நீர்வேலிக் கிராமசபை அறிவித்தல்

நீர்வேலிக் கிராமசபை வைத்தியசாலைக்கு சித்த ஆயுள்வேத முறைப்படி செய்த மருந்துவகைகளும், செந்தூரம், லேகியம், சூரணம், பஸ்பம் முதலியனவும், எண்ணை, தைலவகைகளும், ஆசவம், அரிஷ்டம் முதலியனவும், விநியோகிக்க விரும்புவோர் தங்களின் விலைப் பட்டியலை நீர்வேலிக் கிராமசபைத்தலைவர் அவர்கட்கு 20-2-65 திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் குறித்த திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இப்படிக்கு

இ. அ. பாததுரை

1290 நீர்வேலிக் கி. ச. தலைவர்.

வரி விளம்பரம்

### தேவை

நல்ல நிலைமையில் உள்ளதும், 38 ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்டதும், 1 தொன் தொடக்கம் 1 1/2 தொன் வரை எடையுள்ள பெற்றோல் சாமான் ஏற்றும் வான் தேவை. பின்வரும் முகவரிக்கு அனுப்பவும், கௌரவ காரியதரிசி, யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1545

மானிப்பாயில் ஸ்தாபிக்கப் படவிருக்கும் பெரிய கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு நெசவுத்தொழில் தெரிந்த தராதரமுடைய பெண்பொறுப்பதிகாரி தேவை. வேதனம் பஞ்ச படி உட்பட ரூபா 160-10-280/- பல நெசவுத் தொழில் தெரிந்த பெண்தொழிலாளர்களும் தேவை. பொருத்த வேலைப்படி திறமைக்கேற்ற வேதனம் அளிக்கப்படும். தங்குவதற்கு இலவச இடவசதி அளிக்கப்படும். 15-2-65 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், C/o க. கனகசிங்கம், யமோமிளா, மானிப்பாய். 1547

### நன்றி நவிலல்

தெல்லிப்பழை தென்மேற்கு பன்னாலை வாசியும், பிரபல சித்த ஆயுர்வேத வைத்தியரும் 'விச்சுப்பரியாரியார்' என அன்புடன் அழைக்கப் படுபவருமான எமது தந்தையர் திரு. வைத்தியநாதர் விசுவநாதர் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துச் செய்தி அனுப்பியவர்களுக்கும், நேரில் கலந்து தமது இறுதி மரியாதையைச் செலுத்தியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வி. சங்கரப்பிள்ளை (பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலைத் துணைத் தலைமை ஆசிரியர்), வி. வன்னியசிங்கம் சித்த ஆயுர் வேத டாக்டர். 1559

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இலவசம் தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## "இடமாற்றம் செய்யாதீர்"

வவுனியா, திங்கள்

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிபர் திரு. கனகசிங்கத்தை இடமாற்றம் செய்யவேண்டாமென்றும் அவருக்கு எதிராக வந்த பெட்டிசத்தை ஏற்க வேண்டாமென்றும் கோரி பொதுமக்களால் ஒப்பமிட்ட கடிதம் ஒன்று பொலிஸ் தலைமைப்பீடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு அன்பர்கள் தொடர்ந்து உதவியளித்துவருகின்றனர்.

நேற்றுப் பிற்பகல்வரை 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு பணமாகவும், பொருளாகவும் மொத்தம் 25,433 ரூபா 18 சதம் கிடைத்துள்ளது.

நேற்று பிற்பகல் கிடைத்த வசூல் விபரம்: எஸ். கே. ஆறுமுகம், கைதடி, சாவற்குழி. ரூபா 5-00.

## "சுதந்திரமும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமை என்றால் பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றுவதற்கு பாடுபடுவதல்ல கொள்கையளவில் இலட்சியத்தில் குறிக்கோளில் ஏற்படவேண்டியது தான் ஒற்றுமை.

திரு. வி. தருமலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பண்டைக்காலத்தில் மக்கள் தங்கள் பிரச்னைகளை யுத்தத்தின் மூலம் தான் தீர்த்து வைத்தனர். இன்று மக்கள் தங்கள் வாக்குகளை உபயோகித்துத்தான் தங்கள் பிரச்னைகளை தீர்த்து வைக்க வேண்டும். மலைநாட்டு தமிழ் மக்களின் உரிமை பறிபோகாமல் இருந்தால் இன்று சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறி இருக்கமாட்டாது.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், பேச்சு, செயல் முதலியவற்றில் சிறந்தவர்கள் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தோர் என்றார்.

திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில், 13 வருடமாக கோப்பாய்த் தொகுதி தமிழரசுக்கட்சி அபேட்சகரையே அனுப்பி வந்துள்ளது என்றும் இனியும் அனுப்புமென்றும் தெரிவித்தார்.

திரு எஸ். ஜே. வி செல்வநாயகம் பேசுகையில், தமிழரசுக்கட்சி நிலையான கொள்கைகளைக் கடைப்பிடித்து வருவதால் கட்சி முரணாக நடந்தவர்களை விலக்கிவைத்துவருகிறது என்றார். நம் கட்சி தமிழ் பேசும் மக்களுக்காக என்றென்றும் உழைத்து வந்திருக்கிறதென்றும் வருங்காலத்தில் தமிழ்மக்கள் சிறப்புடன் வாழ வேண்டுமென்பதுதான் கட்சியின் கொள்கை என்றும் அவர் சொன்னார்.

திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழரசுக்கட்சியின் கொள்கை சரியில்லையென்று சொல்லுபவர்கள் தங்கள் கொள்கைகளை விளக்கலாமே 1960-ம் ஆண்டு மந்திரிபதவி வந்த போதிலும் உதறித்தள்ளித் தமிழரின் உரிமையைத் தான் பெற விரும்பினோம். சிறிலங்கா வந்தால் என்ன யு. என். பி. வந்தால் என்ன எங்கள் உரிமையை பறிக்கத்தான வழி வகுக்கிறார்கள்.

மட்டக்களப்பு முன்னாள் எம். பி. திரு செ. இராசதுரை பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சில கட்சிகள் சில சில காலங்களில் கொள்கைகளை மாற்றி மாற்றி மக்கள் முன் தோன்றுகின்றன. தமிழ்பேசும் மக்கள் உரிமை இழந்துவிட்டார்களாம். அதை பெற 2 வருடங்கள் அவகாசம் தாருங்கள் என்று கேட்கிறார்கள்.

சாகப் போகிறவனுக்கு உயிர் கொடுப்பதற்குப் பதிலாகத் தேவாரம் பாடிச் சாகச் செய்வதா?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் செல்வங்களை வெளியில் கொண்டுவர நமக்கென ஆட்சி இருக்கவேண்டும் தங்கம், வெள்ளி எண்ணெய்

## "ஆத்மீக தேசியப்பற்றுள்ளதே; பஹாய் இயக்கம்"

### தேசிய போதனை மகாநாட்டில் கீத் டி போலோ விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்

அகில உலக பஹாய் இயக்க இலங்கைக் கிளையின் தேசிய போதனை மகாநாட்டின் இரண்டாவது நிகழ்ச்சிகள் திரு. கே. சிவப்பிரகாசம் தலைமையில் யாழ்ப்பாணம் கிறிஸ்தவ வாலிபர் சங்க கட்டடத்தில் ஆரம்பமானது தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஆராதனைகளுடன் ஆரம்பமானது.

திரு. கீத்டி போலோ, பஹாய் மதத்தின் ஆத்மீக முறைகளைத் துவங்களை விளக்கி பேசுகையில், பிரார்த்தனைகள், 19 நாள் உபசாரம், வட்டாரசபை, தேசியசபை, தெய்வீக சங்கங்களின் கடமைகள், சட்டங்கள், தின அட்டவணை, கலந்தாலோசிக்கலின் தேவைகள், இளமையில் நம்பிக்கைப் போதனை, சர்வ வல்லமை தத்துவம், போர்க்கால கடமைகள், அரசாங்கத்திற்கு நம்பிக்கையாகவிருத்தல் போன்ற முக்கிய விஷயங்களை எடுத்துக் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பஹாய் இயக்கம் உலக சமாதானத்திற்கு பாடுபடும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட ஒரு ஆத்மீக தேசிய இயக்கமாகும். ஒரு நாட்டில் இருக்கும் பஹாய் இயக்கத்திலுள்ளவர்கள அரசாங்கத்திற்கு எந்த முறையிலும் இடையூறில்லாமல் போதிய சகல உதவிகளையும் உழைப்பின் மூலமோ, அல்லது வேறு உதவிகள் மூலமோ நல்கத் தயங்கமாட்டார்கள். போர்க்களத்துக்குச் சென்று ஒரு பஹாய் போர்வீரன் எதிரிகளை கொல்வதிலும் பார்க்க கூடியளவு சமாதானம் நிலைபெறச் செய்யவேண்டும். அந்த இணக்கத்திலே எதிரி உடன்படாமல் மூர்க்க வெறியுடன் இருந்தால் பஹவத்கீதையிலே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்கு கீதா உபதேசம் கூறியது போல ஸ்ரீ ஹவில் போதனையிலும் யாராயிருந்தாலும் தேசிய நன்மைக்காக எதிரியை கொல்வதற்குத் துணிந்து விடு என்று நமது இயக்கம் போதிக்கின்றது.

திரு. சலோனர் குட் பேசியதாவது:-

ஸ்ரீ கிருஷ்ணா, நபிகள்நாயகம், புத்தபிரான் போன்ற தேவதூதர்கள் வரிசையில் பஹாய்உல்லா அவரின் தேவகுமாரன் அப்துல்பஹா தோன்றினார்கள். இவர்கள் போதனை மிகவும் சிறந்ததோர் மார்க்கம்.

திரு. கே. சிவப்பிரகாசம் பேசுகையில் கூறியதாவது:-

மகாபாரதத்திலே ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா எப்படித் தர்மத்தை நிலைபெறச் செய்தாரோ அதேபோல ஓர் அவதார புருஷராக பஹாயுல்லாவும் தோன்றியிருக்கிறார். போதனை உபதேச அடிப்படையில் இருவருக்கும் எது வித பேதம் இல்லை. தீர்க்கதரிசனமாயமைந்திருக்கும் இப்போதனையில் எவ்வளவோ மார்க்க நெறிகளைக் கடைப்பிடிக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. கடவுள் அவதாரம், படைப்பு போன்றவை பஹாய் மதத்தில் நம்பிக்கை வைக்கக் கூடியவாறு இருக்கிறது.

திருமதி சூ-, திருமதி ஏ சி. எம். பசி, திருவாளர்கள் எம். டி. பாஸ்கரோன். ஏ. சி எம். பாசின், ரவீந்திரநாதன் திரு லயனல் பெரைரா, கே சிவானந்தவேல், கே. நாகமுத்து, ஏ. வி மாணிக்கம் ஆகியோர் கலந்துரையாடலில் பங்குபற்றினர். இலங்கை பஹாய் இயக்க தேசிய போதனையில் இருநாட்களிலும் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு தேசிய தலைமைப் பீடம் விருந்துபசாரம் செய்து கௌரவித்தது குறிப்பிடத் தக்கது, மாலை பஹாய் போதனையுடன் கூட்டம் முடிவு பெற்றது.

## இளைப்பாறும் தலைமையாசிரியர்

யாழ்ப்பாணம், செவ்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரித் தமிழ்ப் பகுதியில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிவரும் திரு. செல்லப்பா நடராசா தமது 39 வருட ஆசிரிய சேவையின் பின்னர் நாளை ஓய்வு பெறுகிறார் இதனை முன்னிட்டு கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர், பெற்றோர் அன்னாருக்கு ஓர் பிரிவுபசார விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. செல்லப்பா நடராசா மேற்படி கல்லூரியில் பழைய மாணவராயும் பின்னர் ஆசிரியராயும் இருந்தவர். பல பத்து வருடம் தலைமையாசிரியராக அதே கல்லூரியில் பணியாற்றி வருபவர். கல்லூரியின் பல வேறு நிர்வாகத் துறையிலும் மிகச் சேவையாற்றியவர்.

---

முதலியன வடக்கு கிழக்கு பகுதியில்தான் இருக்கின்றன வடக்கு, கிழக்கு மலைநாடு எல்லாம் ஒன்று சேர்ந்தால் எங்களை ஒருவராலும் ஒன்றும் செய்யமுடியாது.

## வியட்னாம் மீது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜொன்ஸன் உத்தரவிட்டுள்ளார் வெளியேற்ற நடவடிக்கைகள் உடன் அமுலுக்கு வருமென்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர், தென் வியட்னாமிலுள்ள 1800 அமெரிக்கர் நாட்டைவிட்டு உடன் வெளியேறுவார்கள்,

### ஏவாயுதங்கள் பறக்கின்றன

ஏவாயுதங்கள் பொருத்தப்பட்ட அமெரிக்க விமானங்கள் சில தென் வியட்னாமுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய அமெரிக்கப்படைகளும் திரளாக அங்கு அனுப்பப்பட்டுவருகின்றன.

### ரஷ்யப் பிரதமர் எச்சரிக்கை

அமெரிக்காவின் நடவடிக்கைகள் குறித்து தற்பொழுது வடக்கு வியட்னாமில் சுற்று விஜயம் செய்யும் ரஷ்யப் பிரதமர் திரு கோஸிஜின அமெரிக்காவை எச்சரிக்கை செய்துள்ளார்

### யுத்தம் ஏற்படாது

வடக்கு வியட்னாம் தகராறுகளினால் உலக யுத்தம் ஏற்படாது என்று அமெரிக்க அதிபர் உறுதியளித்துள்ளார்,

தென் கொரியாவிலுள்ள அமெரிக்கத் துருப்புகளும் தென்கொரியத் துருப்புகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன,

அமெரிக்க தாக்குதல் பற்றி வடவியட்னாமுக்கு வந்திருக்கும் ரஷ்யப் பிரதமரின் ராணுவ ஆலோசகர்கள் வடவியட்னாம் பாதுகாப்பு மந்திரியுடன் ஆலோசித்தனர்.

### 222 பேர் பலி

இன்று சைகோனுக்கு 600 மைல் தூரத்தில் தென்வியட்னாம் துருப்புகளுக்கும், வியட்காங் கொரில்லாக்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டையில் 222 வியட்கொங்கியர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## "ஆலயவழிபாட்டின்மூலம் வாழ்வை வளம்படுத்தலாம்"

### அடிக்கல்நாட்டுவிழாவில் ஸ்ரீகாந்தா

கோண்டாவில், திங்கள்

"இன்றைய நாட்டின் சூழ்நிலையில் மக்களது மனம் பலவேறு நெருக்கடியான வழிகளில் சென்று கொண்டிருக்கின்ற வேளையில் சமூகத்திருப்பணியும், மதவழிபாடும் வளர்ச்சியுறுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். மக்கள் வாழ்வில் இன்னலை நீக்கி பேரானந்தத்தை அருளவல்லது ஆலய வழிபாடாகும். இன்றைய காலநிலையில் வளர்ச்சியுற்றுவரும் ஆலயத்திருப்பணிகளை நோக்குமிடத்து இனியும் தமிழ் மக்கள் கவலையுள்ளம் கொண்டவர்களாகவோ அல்லது அடிமைகளாகவோ வாழமாட்டார்கள் என்று நான் திட்டவட்டமாகக் கூறவிரும்புகிறேன், மக்கள் மத்தியில் தாண்டவமாடும் பூசல் பொறாமைபோன்றவற்றை நீக்கும் பணியில் முன்னிற்பது ஆலயத் திருத்தொண்டுகளாகும்."

இணுவில் தெற்கு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலில் பல லட்சம் ரூபாயில் அமைக்கப்படவிருக்கும் ராஜ கோபுரத்திற்கு அத்திவாரக்கல்நாட்டிய காணி நீர்ப்பாசன மந்திரியின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு தமது உரையில் குறிப்பிட்டார்,

வைத்தீஸ்வர வித்தியாசாலை அதிபர் திரு அம்பிகைபாகன், திரு. எஸ். சின்னத்துரை திரு. நீதிராசா (சமாதானநீதவான்) திரு. கனகலிங்கம், திரு. எஸ். நாகலிங்கம், எஸ். துரை ஆகியோரும் பங்குபற்றி உரைநிகழ்த்தினார்கள்.

## இலங்கை விஜயத்தை நீவின் ரத்துசெய்தார்

கொழும்பு, திங்கள்

தற்பொழுது இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பர்மா புரட்சிசபைத் தலைவர் ஜெனரல் நீவின் இலங்கை விஜயத்தை ரத்துச்செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டதற்கு அண்மையில் இங்கு நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல்கள் காரணம்எனக்கூறப்படுகிறது

ஜெனரல் நீவின், இந்தியாவில் இம்மாதம் 12-ந் திகதி வரை தங்கியிருப்பார். அங்கிருந்து அவர் பாகிஸ்தான் செல்வார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் ஜெனரல் நீவின் இலங்கைக்கும் வரத் திட்டமிருந்தார்என்றும் இலங்கையில் இப்பொழுது தேர்தல் பிரசாரம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இங்கு வருவது உசிதமல்ல என்ற கருத்தைக் கொண்டு அவர் தமது விஜயத்தை ரத்துச்செய்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## பால் உணவு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ்

வடக்கு மாகாணத்தில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு வழங்கவென 'விஜத் இண்டர் நஷனல் லிமிட்டெட்' ஸ்தாபனத்தார் 'எஸ். எம். ஏ' என்ற குழந்தைகள் பால் உணவை அரசாங்க சூறாவளி நிதிக்கு அன்பளிப்பு செய்துள்ளனர். விஜத் ஸ்தாபனத்தின் ஏஜண்டுகளான லீவிஸ பிறவுண ஸ்தாபனத்தார் மூலம் இந்த அன்பளிப்பு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீராவிடம் அளிக்கப்பட்டது. விஜயத் ஸ்தாபனத்தைச்சேர்ந்த திரு. டேவிட் செல்வரத்தினம் அன்பளிப்பு பொருட்களை அரசாங்க அதிபரிடம் கையளித்தார்,

### இந்தியா கவலை

தற்பொழுது ஏற்பட்டுள்ள வியட்னாம் நெருக்கடிகள் குறித்து இந்தியா கவலை கொண்டிருப்பதாக பிரதமர் திரு. சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

தென்கிழக்காசியாவில் அமைதியை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளுமாறு அமெரிக்க அதிபரையும் ரஷ்யப் பிரதமரையும் கேட்டுக்கொள்ளப் போவதாகவும் அவர் கூறினார்

டெல்லியி வெளிவிவகார இலாகா விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தென்கிழக்கசிய நிலைமை குறித்து தீவிர கவலை தெரிவிக்கப்பட்டது. ஆக்கிரமூட்டும் நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டுமெனவும் அறிக்கை கூறியது.

## திருமண அழைப்பு

### நடராசா — அன்னலட்சுமி

யாழ்ப்பாணம் மாக்கற் பிரபல வர்த்தகர் மா. கணபதிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரன் திருவளர் செல்வன் நடராசாவுக்கும் (வைத்தியக் கல்லூரி கொழும்பு) கொழும்பு பிரபல வர்த்தகர் மு. முத்தையாபிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி திருவளர் செல்வி அன்னலெட்சுமிக்கும் நிகழும் குரோதி வருடம் தை திங்கள் 28-ஆம் நாள் 10-2-65 இரவு 2-39 மணி தொடக்கம் 3-34 மணிவரை வரும் தனுசுக்கினைச முகூர்த்த நல்வேளையில் மணமகள் இல்லமாகிய கொழும்பு மக்கினோட் இல 18, பம்பலப்பிட்டியில் திருமண வைபவங்களிலும், 11-2-65 மணமகன் இல்லம் யாழ்ப்பாணம் சீனிவாசகம் ரோட் இல 18 கொட்டடியில் மணமக்களை வரவேற்பு வைபவங்களிலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

மா. கணபதிப்பிள்ளையும் பாரியாரும்,
18, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

மு முத்தையாபிள்ளையும் பாரியாரும்,
18, மக்கினோட் வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு

## நன்றி நவிலல்

நேற்று (8-2-65) திங்கட்கிழமை நடைபெற்ற எங்கள் புதல்வி செல்வி கோமதியம்மாளின் ருது சாந்தி வைபவத்திற்கு சமூகந்தந்தும், பரிசுகள் வழங்கியும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் சிறப்பித்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

இங்ஙனம்
M. நாகலிங்கஆச்சாரி தம்பதிகள்
134, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் 1560

காங்கேசன்துறைத்தொகுதி
ஐக்கிய இடதுசாரி
அபேட்சகர்
கி. வைத்தியநாதசன்
அவர்களை ஆதரித்து
பொதுக்கூட்டம்
காலம் 10-2-65 புதன்கிழமை
நேரம் மாலை 4 மணி
இடம் தெல்லிப்பளை சந்தை மைதானம்
தலைவர்
தோழர் பொன். நாகலிங்கம்
(உடுவில் அபேட்சகர்)
பிரதமபேச்சாளர்
டாக்டர்
கொல்வின் R D சில்வா

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org